செ.வெ.எண்: 647 நாள்: 30.09.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 3 பயனாளிகளுக்கு ரூ.5.62 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (30.09.2019) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்றார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழக அரசால் தமிழக மக்களின் நலனுக்காக எண்ணற்ற பல திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களின் தேவைகளை அறிந்து நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் வாரந்தோறும் திங்கள்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்து துறை அரசு அலுவலர்களும் கலந்துகொள்ளும் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படுகிறது.

இன்றைய மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து விலையில்லா வீட்டுமனைப் பட்டா, பட்டா மாறுதல், குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு, வங்கி கடன், பசுமைவீடு, சாலைவசதி, குடிநீர்வசதி, முதியோர் உதவித்தொகை, திருநங்கைகளுக்கான வீட்டுமனைப் பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வழியுறுத்தி 350 மனுக்கள் வரப்பெற்றன. வரப்பெற்ற மனுக்களை தொடர்புடைய அலுவலர்களிடம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக பொதுமக்களின் நியாயமான கோரிக்கைகள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஆவுடையார்கோவில் மற்றும் பொன்னமராவதி வட்டத்தை சேர்ந்த 2 பயனாளிகளுக்கு ரூ.1.50 லட்சம் மதிப்பீட்டில் முதலமைச்சரின் பொதுநிவாரண நிதி உதவித்தொகைக்கான காசோலைகளும், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், திருநல்லூர் அரசு

உயர்நிலைப்பள்ளியில் தனபாக்கியம் என்பவருக்கு கருணை அடிப்படையில் சமையளர் பணியிடத்திற்கான ஆணையும், 1 நபருக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் ரூ.4,12,500 மதிப்பீட்டில் தீருதவி உதவித்தொகைக்கான காசோலைகளும் என மொத்தம் ரூ.5,62,500 மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

அரசின் நலத்திட்ட உதவிகளை பெறும் பயனாளிகள் இதனை தங்கள் வாழ்வின் முன்னேற்றத்திற்கு சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மாலதி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் சசிகலா, சமூக பாதுகாப்பத்திட்ட தனித்துணை ஆட்சியர் கிருஷ்ணன் உள்ளிட்ட அனைத்துத்துறை அரசு அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**